ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 1784/ 5 - 2012 නොවැම්බර් මස 12 වැනි සඳුදා - 2012.11.12
*1784/5 ஆம் இலக்கம் – 2012 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 12 ஆந் திகதி திங்கட்கிழமை*
*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

*அறிவித்தல்*

**பொறியியல் தொழில் தொடர்பான சம்பளச் சபை**

*(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, பொறியியல் தொழில் தொடர்பான சம்பளச் சபையானது, அக்கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு, இதற்கான அட்டவணையில் தரப்பட்டுள்ள தீர்மானங்களைச் செய்வதற்கு அதற்குள்ள உத்தேசம் பற்றி இத்தால் அறிவிக்கின்றது.*

*உத்தேச தீர்மானங்களுக்கான ஆட்சேபனைகள் சபைத் தவிசாளரினால் 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 6 ஆந் நாளன்று நண்பகல் 12.00 மணி வரை பெற்றுக்கொள்ளப்படும்.*

*அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும், அத்தகைய ஆட்சேபனை எந்த எதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.*

*வீ. பி. பீ. கே. வீரசிங்க,*
*தலைவர்,*
*பொறியியல் தொழிலுக்கான சம்பளச் சபை.*

*தொழிற் திணைக்களம்,*
*கொழும்பு 5,*
*2012, ஒற்றோபர் 16.*

**அட்டவணை**

*பொறியியல் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 10 ஆந் திகதிய 9447 ஆம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ளதும், காலத்திற்குக் காலம் வேறுபடுத்தப்பட்டனவும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டனவுமான முடிபுகள் அவ்வட்டவணையின் II ஆம் பகுதிக்கு பதிலாக பின்வரும் புதிய பகுதியை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தல் வேண்டும்:-*

*பகுதி I*

**ஒரு மாதத்திற்கான கீழெல்லைச் சம்பள வீதம்**

**தொழிலாளர்களது வகை**
*தேர்ச்சியற்ற தொழிலாளர்கள்*
*பயிற்சி தேவைப்படாத வேலையாளர்கள்.*

சிவில் எந்திரவியல்
பொறிமுறை எந்திரவியல்
மின்னியல் எந்திரவியல்
வானொலி, இலத்திரன் முறை எந்திரவியல்
} பயிற்சி தேவைப்படாத வேலையாளர்கள்

ஓரளவு தேர்ச்சியுடைய வேலையாளர்கள்
சிவில் எந்திரவியல் :

பக்க வடிகால்களை வெட்டுதல், வீதியின் மேற்பரப்பைக் கிளறுதல், உலோகம் பரப்புதல், உலோகம் ஏற்றுதல், இறக்குதல் அத்துடன் அராவுதல், வீதிகளுக்குத் தார் இடுதல் அத்துடன் கையினால் கொங்கிறீற்றைக் கலக்குதல் என்பனவற்றில் தொழிலுக்கமர்த்தப்பட்ட வேலையாளர்கள் உட்பட வீதிகளைப் பழுதுபார்ப்பதிலும் நிர்மாணிப்பதிலும் பேணுவதிலும் தொழிலுக்கமர்த்தப்பட்ட தீந்தை பூசுநர்களும் கொற்றன் துணையாட்களும் கொல்லன் துணையாட்களும்.

**பொறிமுறை எந்திரவியல் :**

கொல்லர் அடிக்குநர்களும் ஆமார் ஆட்களும் சீர்படுத்துநர்கள் (இரும்பு பித்தளையும்) உருக்குநர்கள் (இரும்பு பித்தளையும்) சரிபார்க்குநர்கள் (வெட்டுமரம்) அறுப்போர், அழுத்துநர்கள் (மரம்) கொதிகலன் பணியாட்கள் சாரதிகள் (எஞ்சின்), தீயணைப்போர், தயர் பழுதுபார்ப்போர், தயர் வல்கனைஸ்காரர், தீந்தை பூசுநர்கள் வில்லாட்கள், கொழுப்புப் பூசுநர்கள், துப்பரவாக்குநர்கள், கழுவுநர்கள்.

மின் முறை எந்திரவியல் :

கம்பியிடுவோர், மின்தட்டு உருவாக்குநர்கள் :

வானொலி இலத்திரன் முறை எந்திரவியல் :

இணைப்போர் பற்றறி பெட்டி உற்பத்தியாளர், (வானொலி) பிற்றாக பிடிப்போர், வெட்டுவோர் (படலிகை) வளைவாக்குநர், அச்சிடுவோர் (பலகைகள், முகப்புகள், சின்னங்கள் முதலியன) சரிபார்க்குநர்கள், அனோட்டுப்படுத்துநர்கள், பொறியிடுநர், வலுஅழுத்தி இயக்குநர்கள், அமைவு பரீட்சிப்போர், அலகு பரீட்சிப்போர், செதுக்குருவம் செய்வோர், (அச்சிடப்பட்ட பலகைகளையும் மினமப் பெருக்கிகளையும் தயாரித்தல்) பகட்டா மிடற் பொறி இயக்குநர்கள், மணலிடற்பொறி இயக்குநர்கள்.

தேர்ச்சியுடைய வேலையாளர்கள் :

**சிவில் எந்திரவியல் :**

வீதிகளைப் பழுதுபார்ப்பதிலும் நிர்மாணிப்பதிலும் பேணுவதிலும் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஈய வேலை செய்வோர், கொல்லர், சைகை எழுதுவோர், மெருகிடுநர் (பிரெஞ்சு மெருகு பூசுவோர்), கொற்றர், எண்ணெய் கொதி நீராவி உருளிச் சாரதிகள், கப்பல் தச்சர் உருவப்பகுதி அமைப்போர், முகடு தயாரிப்போர், சுரங்கத் தொழிலாளர்கள், ஊகையாளரும் துளைப்போரும் அத்துடன் சம்மட்டியடிப்போர்.

**பொறிமுறை எந்திரவியல் :**

சுருள் தொழில்நுட்பவியலாளர், பொறியலாளர் (இரும்பு உருக்கு வேலைப்பாட்டு) பொறியாளர் (மர வேலைப்பாடு) கன்னார் பொருத்துநர், கொதி கலனாக்கிகள் உருக்கினைஞர்களும் எரிவெட்டிகளும், வலு ஆமார் இயக்குநர்கள், பாலிடுநர் (இரும்பும் பித்தளையும்), மூட்டுநர், அகணி ஆக்குநர், கோலஞ் செய்வோர், தச்சர், பெட்டகம் ஆக்குநர், படகு அமைப்போர், வாள் தீட்டுவோர், பொறிச் சுத்தி தீட்டுவோர், பயணப்படகுத் தண்டலாள் சாரதிகள், இணைப்பாளர் (கயிறும் கப்பற்பாயும் தயாரிப்போர்) கண்ணாடி பொருத்துநர், சாரதிப் பொறியியலாளர்கள், பொறியியலாளர்கள் இணைப்பு வேலையாட்கள் (மோட்டார்) ஈயக் கம்பிகள் தரையுநர்களும், அழுத்துநர்களும், கிரேன் சாரதிகள்.

**மின்முறை எந்திரவியல் :**

மின் தொழில் நுட்பவியலாளர், ஆமேச்சர் சுற்றுவோர், ஆழிப்பெட்டி இயக்குநர்கள் , வானொலி, இலத்திரன் தொழில் நுட்பவியலாளர் :

(வானொலி), மின்நிலை விசை மாற்றி உருவாக்குநர், சுருள் சுற்றுவோர், மால்வார்ப்போர், வானொலி பொறியியலாளர், மெருகிடுநர் (வானொலிப் பெட்டகமும் ஏனைய பாகங்களும்), மின் நிலை விசை மாற்றமைவு சுற்றுவோரும், இணைப்போர், சுருள் தொழில் நுட்பவியலாளர், வரிசையாக்குநர்.

**காவலாளர்கள் :**

| | |
|---|---|
| சிவில் எந்திரவியல்<br>பொறிமுறை எந்திரவியல்<br>மின்னியல் எந்திரவியல்<br>வானொலி, இலத்திரன் முறை எந்திரவியல் | எல்லா வகைகளிலும் ஈடுபடுத்தப்பட்டுள்ள காவலாளர்கள். |

**தொழில் பழகுநரும், தொழில் பயிலுநரும் :**

| | |
|---|---|
| சிவில் எந்திரவியல்<br>பொறிமுறை எந்திரவியல்<br>மின்னியல் எந்திரவியல்<br>வானொலி, இலத்திரன் முறை எந்திரவியல் | முழுத்தேர்ச்சி, ஓரளவு தேர்ச்சிக்கான பயிற்சிக்காலப் பகுதி (4 ஆண்டுகள்) |

இவ் அட்டவணையில் "ஆண்டு" என்பது எந்தத்தொழில் பழகுநர், பயிலுநர் தொடர்பிலும் 365 நாட்கள் தொடர்ச்சியாக தொழிலில் ஈடுபட்டிருத்தல் எனக் கருதப்படல் வேண்டும். என்பதுடன் இப்பயிற்சியானது அங்கீகரிக்கப்பட்ட பயிற்சி நிறுவனமொன்றினால் இயந்திரங்களில் கோட்பாட்டுக் குறிப்புக்களுடனான பயிற்சியாக இருத்தல் வேண்டும்.

"பகுதி II

**மாதமொன்றுக்குக் கொடுபட வேண்டிய ஆகக்குறைந்த சம்பள வீதங்கள்**

| ஊழியர் ஆண்டு | தேர்ச்சி அற்றவர்கள் ரூ. ச. | அரைத்தேர்ச்சி உள்ளோர் ரூ. ச. | தேர்ச்சியுள்ளோர் ரூ. ச. | காவலாளர்கள் ரூ. ச. | தொழில் பயில்வோர் ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 12,500.00 | 12,800.00 | 13,100.00 | 12,500.00 | 7,500.00 |
| 2 ஆம் ஆண்டு | 12,600.00 | 12,925.00 | 13,250.00 | 12,600.00 | 7,650.00 |
| 3 ஆம் ஆண்டு | 12,700.00 | 13,050.00 | 13,400.00 | 12,700.00 | 7,800.00 |
| 4 ஆம் ஆண்டு | 12,800.00 | 13,175.00 | 13,550.00 | 12,800.00 | 7,950.00" |
| 5 ஆம் ஆண்டு | 12,900.00 | 13,300.00 | 13,700.00 | 12,900.00 | |
| 6 ஆம் ஆண்டு | 13,000.00 | 13,425.00 | 13,850.00 | 13,000.00 | |
| 7 ஆம் ஆண்டு | 13,100.00 | 13,550.00 | 14,000.00 | 13,100.00 | |
| 8 ஆம் ஆண்டு | 13,200.00 | 13,675.00 | 14,150.00 | 13,200.00 | |
| 9 ஆம் ஆண்டு | 13,300.00 | 13,800.00 | 14,300.00 | 13,300.00 | |
| 10 ஆம் ஆண்டு | 13,400.00 | 13,925.00 | 14,450.00 | 13,400.00 | |
| 11 ஆம் ஆண்டு | 13,500.00 | 14,050.00 | 14,600.00 | 13,500.00 | |
| 12 ஆம் ஆண்டு | 13,600.00 | 14,175.00 | 14,750.00 | 13,600.00 | |
| 13 ஆம் ஆண்டு | 13,700.00 | 14,300.00 | 14,900.00 | 13,700.00 | |
| 14 ஆம் ஆண்டு | 13,800.00 | 14,425.00 | 15,050.00 | 13,800.00 | |
| 15 ஆம் ஆண்டு | 13,900.00 | 14,550.00 | 15,200.00 | 13,900.00 | |
| 16 ஆம் ஆண்டு | 14,000.00 | 14,675.00 | 15,350.00 | 14,000.00 | |
| 17 ஆம் ஆண்டு | 14,100.00 | 14,800.00 | 15,500.00 | 14,100.00 | |
| 18 ஆம் ஆண்டு | 14,200.00 | 14,925.00 | 15,650.00 | 14,200.00 | |

பகுதி IV

**வாராந்த விடுமுறை (பிரிவு 24)**

பொறியியல் தொழிலுக்கான சம்பளச் சபையின் தீர்மானங்களுடன் பிரிவு 2 (ஆ) உடன் மேலும் கீழ்வரும் புதிய பிரிவு சேர்க்கப்படுகிறது.

சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 25 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு இணங்க ஓர் பொது விடுமுறை தினமானது வாராந்த விடுமுறை தினமாக வந்தமையுமாயின் அவ்விடுமுறைக்காக அடுத்து தொடர்ந்துவரும் கிழமையில் உள்ள ஆறு வேலை நாட்களில் ஏதாவதொரு நாள் அடுத்த வார விடுமுறைக்கு முன்னராக விடுமுறை வழங்கப்படல் வேண்டும்.

11- 983/1

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### புடவை உற்பத்தித் தொழில்

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க புடவை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையானது மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30ஆம் பிரிவினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு அட்டவணையில் தரப்பட்டுள்ள முறையில், அவ்வட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறாக சபையின் அத்தகைய முடிவுகளை மாற்றுவதற்கு உத்தேசிக்கின்றது என இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறப்பட்ட உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரை சபைத் தலைவரினால் பெற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்களின் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

வீ. பி. பீ. கே. வீரசிங்க,
தலைவர்,
புடைவை உற்பத்தித் தொழிலுக்கான
சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2012, ஒற்றோபர் 10.

### அட்டவணை

புடவை உற்பத்தித் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு, 1971ஆம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 29 ஆந் திகதிய 14955/ 19 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அறிவித்தலினகத்தேயுள்ள அட்டவணையில் குறிப்பிடப் பட்டவையும், காலத்திற்குக் காலம் மாற்றப்பட்டவையும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1,660/ 35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் இறுதியாக மாற்றப்பட்டவையுமான முடிவுகள், அட்டவணையின் II ஆம் பகுதிக்காகப் பின்வரும் புதிய பகுதியினைப் பிரதியீடு செய்வதன் மூலம் மேலும் மாற்றப்படுதல் வேண்டும் :-

"பகுதி II

### வேலையாளர் வகுப்பு

**தரம் I (தேர்ச்சியுடையோர்):**

வடிவமைப்போர், செதுக்குநர், புனைவுரு வேலைசெய்வோர் (நெய்தல்), முற்புற அளவாளர்கள், பொருத்துவோர், சிக்கெடுத்தல், விசைச்சட்டம் நூற்றுதல், நெசவிழைத்தல், சுற்றுதல், அளவுபடுத்தல், நெய்தல்.

**தலைமை வேலை செய்வோர்கள்:**

விசைச் சட்டகம் நூற்றல், நெய்தல்.

**வேலை செய்வோர்கள்:**

மெருகூட்டுதல், அளவுபடுத்தல், வாருதல், சிக்கெடுத்தல்.

**நூலிழை வேலை செய்வோர்கள்:**

நெய்தல்

**தரம் II (தேர்ச்சியுடையோர்) :**

**தறிக்கட்டைப் பரிசாரகர், வேலைசெய்வோர்கள்:**

குதம், அச்சிடுதல், சாயமூட்டுதல், வெளிறச்செய்தல், இரட்டித்தல், சுற்றுதல், நெசவிழைதல், உள்ளிழுத்தல், அத்துடன் ஊதலறை.

**வேலை உதவியாளர்கள்:**

*சிக்கெடுத்தல்*

**நூலிழை வேலை செய்வோர்கள்:**

*நூற்றல், விசைச் சட்டகம், தகர்ப்போர், நெசவாளர்.*

**ஓரளவு தேர்ச்சியுள்ளவர்கள்:**

*மூடையாளர் (கட்டுதலும் மூடையாக்குதலும்), சுற்றிக்கட்டுநர், பொதிகட்டுநர், பெட்டிபோடுநர், தச்சர், இரசாயனவியலாளர், குளிரூட்டு பொறித்தொகுதியாளர், எண்ணுவோர், நூல் மூடுவோர், உருளி, கூடைப்பையன்கள் (சுற்றுதல்), வெட்டுநர் அட்டை வெட்டல் மேற்பார்வையாளர்/தலைமை வெட்டல் மேற்பார்வையாளர், கழற்றுநர், இரட்டிப்பாக்குநர், உள்ளிழுக்குநர், மூடையிடுநர், முறுக்கிழை காயவைத்தல், அடுக்கு வரிசையாளர், சாயமூட்டுநர், வேகச்சுழற்றி அளவிடுநர், நூற்புக்கதிர், பரிசோதகர்கள், முதற்துண்டுத் துணி பொருத்துநர், உதவி அரைப்பாளர்கள், தட்டை அட்டை நீர் பிழிவாளர்கள், வேலை செய்வோர், சுழற்றுதல், வகை பிரிப்போர், கண்காணிமார், வெள்ளாவி வைக்குநர், எந்திரக் கவனிப்பாளர்கள், குழாயமைப்பு சுற்றுநாடா எந்திரவியலாளர்.*

**எந்திர ஆண்கள்**

*எந்திரம் வாருதல், கத்தரித்தல் மற்றும் "சியரிங்" "படிங்" அச்சிடுதல் சவர்க்காரமிடுநர் போன்ற பிரிவுகள்.*

**எந்திரப் பெண்கள்:**

*கட்டில் விரிப்பு.*

**கார உப்பிடுவோர் கலக்குநர்:**

*நிறம், அளவு.*

**எட்டுநர், உருட்டுநர், பழுதுபார்ப்போர்:**

*வாரும் ஊசி, நீள் பட்டை, தார்முள் மாற்றும் அழுத்துக்கட்டை.*

**நுற்புக்கதிர், நெசவுத்தறி நாடா நாக்கு:**

*மாதிரி பார்க்குநர், மடிப்புக்கடையிடுநர், திரையாக்குநர், திரையச்சிடுநர், அடுக்குநர் அட்டை, தையற்காரர், நுனிபொசுக்குநரும் வடிவமைப்பாளரும் அளவாளர்கள் - பின்புறம், அழுத்துக்கட்டை ஆக்குநர், நூற்போர்- நூல் நூற்கும் எந்திரவளையம் மதிப்பிடுதல், தைப்போர், தைப்போர்- நாடா, தையல் பொறி அட்டை, இடையீடு வரைதல், சிம்பலெக்ஸ் கம்பளிப் புரியிழைவாக்கம், கழிவு அட்டை.*

**பெருந்தொட்டியாளர் :**

*நூற்கழி வெளிறவைத்தல், பருத்தி சாயமூட்டுதல், நூற்கழி சாயமூட்டுதல்*

**சுற்றுவோர் :**

*தன்னியக்க பேர்ண் சாம்பல் நிறம், நூல்சுற்று கூம்பு, இரட்டிப்பாக்கி, யூனிவர்சல் பேர்ண், சுற்றுறையிடு பையன்கள் (நூற்றல்).*

**தேர்ச்சியற்றவர்கள் :**

*பின்புற நிரப்புநர், மூடையிடுநர் (குதம்), மூட்டை அடையாளமிடுவோர், மூடையிடுதல் சரிபார்ப்போர், பற்றி நிரப்புநர், காவுநர்- தறிக்கட்டை நூல்வெட்டு, பருத்தி சுழற்றுகை, சுழல் வட்டத்தகடு, கணிப்புப்பலகை.*

**துப்பரவாக்குநர்கள் :**

*அறை, அழுத்துக்கட்டை துணி குவிப்போர், கூடைப்பையன்கள் (கம்பள விரிப்புப் பிரிவு) வெட்டுநர்- வளையல்.*

**மடிப்புகள் சேர்ப்போர், மடிக்குநர் :**

*கிறீஸ், கை*

**உதவியாளர், தொழிலாளர்கள், எந்திரவியலாளர் :**

பருத்தி விதையகற்றல், பஞ்சு வெட்டும் பொறி கலத்தல், கழுவுதல்.

**இலக்கம் அடையாளமிடுவோர், வேலையாளர்கள், எண்ணெயிடுநர் :**

பொதி செய்வோர்கள் - கழிவு எடுப்போர்கள், தகடு இடுவோர்கள்.

**தகடு இடுவோர்கள் :**

முன்புறம்/பின்புறம்

**உருளை மூடுநர் உதவியாளர், சிம்பு கழிவு திறப்போர் :**

விதை சேகரிப்போரும் பொதி செய்வோரும்.

**கவ்வுகோல் பழுதுபார்ப்போர் :**

அழுத்துக்கட்டை ஆக்குநர் - உதவியாளர்கள்,

**உதவியாளர்கள் :**

முத்திரையிடுவோரும் பொதிகட்டுவோரும், தைப்போரும்.

**பை- பட்டி :**

உரிப்போர் சணல்கோதுவோர், பெருக்குநர், நூல்பிரித்தெடுப்போர் நிறையிடுவோர்/ தராசு ஆட்கள், பேர்ண் சுற்றுநர் (கம்பளவிரிப்புப் பிரிவு) நூலிழை பதப்படுத்துவோரும் விநியோகிப்போரும்.

**மாதமொன்றுக்கான ஆகக்குறைந்த சம்பள வீதம்**

| ஊழிய ஆண்டு | தேர்ச்சி அற்றோர் ரூ. ச. | ஓரளவு தேர்ச்சி உடையோர் ரூ. ச. | தேர்ச்சி உடையோர் தரம் II ரூ. ச. | தேர்ச்சி உடையோர் தரம் I ரூ. ச. |
|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 9,660.00 | 10,080.00 | 10,500.00 | 10,920.00 |
| 2 ஆம் ஆண்டு | 9,760.00 | 10,205.00 | 10,650.00 | 11,095.00 |
| 3 ஆம் ஆண்டு | 9,860.00 | 10,330.00 | 10,800.00 | 11,270.00 |
| 4 ஆம் ஆண்டு | 9,960.00 | 10,455.00 | 10,950.00 | 11,445.00 |
| 5 ஆம் ஆண்டு | 10,060.00 | 10,580.00 | 11,100.00 | 11,620.00 |
| 6 ஆம் ஆண்டு | 10,160.00 | 10,705.00 | 11,250.00 | 11,795.00 |
| 7 ஆம் ஆண்டு | 10,260.00 | 10,830.00 | 11,400.00 | 11,970.00 |
| 8 ஆம் ஆண்டு | 10,360.00 | 10,955.00 | 11,550.00 | 12,145.00 |
| 9 ஆம் ஆண்டு | 10,460.00 | 11,080.00 | 11,700.00 | 12,320.00 |
| 10 ஆம் ஆண்டு | 10,560.00 | 11,205.00 | 11,850.00 | 12,495.00" |

11- 983/2

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### மோட்டார் போக்குவரத்துத் தொழில்

மோட்டார் போக்குவரத்துத் தொழிலுக்கான சம்பளச் சபையானது, சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவின் வாயிலாக தனக்களிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு இவ்வறித்தலுக்கான அட்டவணையினகத்தே குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் முடிபுகளை அவ்வட்டவணையிற் கூறப்பட்டுள்ளவாறு மாற்றுவதற்கு உத்தேசித்துள்ளதென மேற்கூறிய கட்டளைச் சட்டத்தின் (136 ஆம் அத்தியாயம்) 28 ஆம் பிரிவின் கீழ் இத்தால் அறிவிக்கின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரைக்கும் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் ஆட்சேபனைக்கான காரணங்களைக் கூறும் கூற்றொன்றை உடையதாக எழுத்துவாயிலாகச் செய்யப்படல் வேண்டும்.

வி. பி. பீ. கே. வீரசிங்க,
தலைவர்,
மோட்டார் போக்குவரத்துத்
தொழிலுக்கான சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2012, ஒற்றோபர் 05.

### அட்டவணை

மோட்டார் போக்குவரத்துத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டு 1947 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 14 ஆந் திகதிய 9667 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அறிவிப்பிற்கான அட்டவணையில் தரப்பட்டனவையும், காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1660/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிபுகள் , அவ்வட்டவணையின் II ஆம் பாகத்தின் 6 ஆம் பந்திக்குப் பதிலாகப் பின்வரும் புதிய பந்தியினை பதிலீடு செய்வதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும் :-

"பகுதி II

### தொழிலாளர் வகுப்பு

**'ஏ' வகுப்புத் தொழிலாளர் :**

22 பிரயாணிகளுக்கு மேல் ஏற்றுவதற்கு உத்தரவு பெற்ற பேருந்துச் சாரதிகள்.

**'பி' வகுப்புத் தொழிலாளர் :**

22 பிரயாணிகளையும் அதற்குக் குறைந்த தொகைப் பிரயாணிகளையும் ஏற்றுவதற்கு உத்தரவுபெற்ற பேருந்து சாரதிகள், நோயாளர் மோட்டார் வண்டிச் சாரதிகளும், லொறிச் சாரதிகளும், (பெருந்தோட்டம் ஒன்றிற்கு சொந்தமானதாய் அத் தோட்டத்தினுள் மட்டும் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படுபவை தவிர) 20 அந்தருக்கு மேற்பட்ட பாரம் ஏற்றும் உத்தரவுபெற்ற லொறிச் சாரதிகளும், வான் சாரதிகளும்.

**'சீ' வகுப்புத் தொழிலாளர் :**

வாடகைக் கார்கள், கெப்கார்களின் சாரதிகள் 20 அந்தருக்குக் குறைந்த பாரம் ஏற்ற உத்தரவுபெற்ற லொறி, வான் சாரதிகள் (பெருந்தோட்டம் ஒன்றிற்குச் சொந்தமானதாய் அத்தோட்டத்தினுள் போக்குவரத்திற்கு பயன்படுத்தப்படும் லொறிகள் தவிர) வான் சாரதிகள், முச்சக்கரவண்டிச் சாரதிகள் மற்றும் பிரேதமேற்றும் மோட்டார் வண்டிச் சாரதிகள்.

**'டி' வகுப்புத் தொழிலாளர் :**

பொருட்கள் கொண்டு செல்வதற்கான இழுவை வண்டிகள் கொண்ட இழுபொறிச் சாரதிகள், இழுவை வண்டிகள் கொண்ட லொறிச் சாரதிகள் (சிகாமல் குதிரை வண்டி வகை, இழுவை வண்டிகள் கொண்ட லொறிகள் தவிர அல்லது தோட்டத்தினுள் மட்டும் போக்குவரத்திற்காகப் பயன்படுத்தப்படும் இழுபொறிச் சாரதிகள்.)

**'ஈ' வகுப்புத் தொழிலாளர் :**

பெருந்தோட்டங்களுக்குச் சொந்தமானதும் தோட்டத்தினுள் மட்டும் பாவிக்கப்படுவதுமான பின்வரும் வாகனங்களின் சாரதிகள் (அ) லொறிகள், (ஆ) இழுவை வண்டிகள் கொண்ட இழுபொறிச் சாரதிகள்.

**'எவ்' வகுப்புத் தொழிலாளர் :**

நடத்துநர்கள், எழுதுவினைஞர்கள், காசாளர்கள், சீட்டு எழுதுநர்கள், ஆசனப் பதிவு எழுதுவினைஞர்கள் முதலான பேருந்து வண்டியிற் பணியாற்றுவோர்.

**'ஜீ' வகுப்புத் தொழிலாளர் :**

20 அந்தருக்கு மேற்பட்ட பாரமேற்ற உத்தரவுபெற்ற லொறிகளின் துப்புரவாக்குநரும் சுமையாட்களும்.

**'எச்' வகுப்புத் தொழிலாளர் :**

20 அந்தருக்கும் அதற்குக் குறையவும் பாரமேற்ற உத்தரவுபெற்ற லொறிகளின் துப்புர வாக்குநரும் சுமையாட்களும் பேருந்துகள் வாடகை வண்டிகள், கெப் கார்கள், வான்கள், நோயாளர் வண்டிகள், பிரேதமேற்றும் மோட்டார் வண்டிகள்.

**'ஐ' வகுப்புத் தொழிலாளர் :**

பேருந்து பரிசோதகர்களும் நேரம் பதியுநரும்.

**'ஜே' வகுப்புத் தொழிலாளர் :**

பேருந்து பரிசோதகர்களும், பஸ் நிலையக் கண்காணிப்பாளரும்.

**'கே' வகுப்புத் தொழிலாளர் :**

மோட்டார் போக்குவரத்துத் தொழிலில் ஈடுபட்ட, மேலே கூறப்பட்டோர் தவிர்ந்த ஏனைய எல்லாத் தொழிலாளர்களும்.

**முன்காட்டப்பட்ட முடிபுகள் :**

(அ) "சுத்திகரிப்போர்" எனப்படுவோர் (எழுதுவினைஞர் வகையை சாராது) லொறிகள், பேருந்துகள், வாடகைக் கார்கள், கெப் கார்கள், வான்கள், நோயாளர் வண்டிகள் அல்லது பிரேதமேற்றும் மோட்டார் வண்டிகள்.

(ஆ) "சுமையாட்கள்" எனப்படுவோர் வேலைக்காக வாகனங்களிலே பிரயாணஞ் செய்யவேண்டியவர்களான லொறிகள், பேருந்துகள், வான்கள், வாடகைக் கார்கள் கெப் கார்கள், நோயாளர் வண்டிகள் பிரேதமேற்றும் மோட்டார் வண்டிகள் ஆகியவற்றில் சுமைகள் ஏற்றி இறக்குவோர்.

**பகுதி II**

*ஆகக் குறைந்த மாதச் சம்பள வீதம்*

| ஊழியர் ஆண்டு | வகுப்பு ஏ, டி ரூ. ச | வகுப்பு பி ரூ. ச | வகுப்பு சீ ரூ. ச | வகுப்பு ஈ, எவ்.,ஜே. ரூ. ச | வகுப்பு ஜீ ஐ ரூ. ச | வகுப்பு எச் ரூ. ச | வகுப்பு கே ரூ. ச |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 10,650.00 | 10,275.00 | 9,865.00 | 9,565.00 | 9,225.00 | 8,965.00 | 8,625.00 |
| 2 ஆம் ஆண்டு | 10,850.00 | 10,450.00 | 10,015.00 | 9,690.00 | 9,325.00 | 9,065.00 | 8,725.00 |
| 3 ஆம் ஆண்டு | 11,050.00 | 10,625.00 | 10,165.00 | 9,815.00 | 9,425.00 | 9,165.00 | 8,825.00 |
| 4 ஆம் ஆண்டு | 11,250.00 | 10,800.00 | 10,315.00 | 9,940.00 | 9,525.00 | 9,265.00 | 8,925.00 |
| 5 ஆம் ஆண்டு | 11,450.00 | 10,975.00 | 10,465.00 | 10,065.00 | 9,625.00 | 9,365.00 | 9,025.00 |
| 6 ஆம் ஆண்டு | 11,650.00 | 11,150.00 | 10,615.00 | 10,190.00 | 9,725.00 | 9,465.00 | 9,125.00 |
| 7 ஆம் ஆண்டு | 11,850.00 | 11,325.00 | 10,765.00 | 10,315.00 | 9,825.00 | 9,565.00 | 9,225.00 |
| 8 ஆம் ஆண்டு | 12,050.00 | 11,500.00 | 10,915.00 | 10,440.00 | 9,925.00 | 9,665.00 | 9,325.00 |
| 9 ஆம் ஆண்டு | 12,250.00 | 11,675.00 | 11,065.00 | 10,565.00 | 10,025.00 | 9,765.00 | 9,425.00 |
| 10 ஆம் ஆண்டு | 12,450.00 | 11,850.00 | 11,215.00 | 10,690.00 | 10,125.00 | 9,865.00 | 9,525.00 |
| 11 ஆம் ஆண்டு | 12,650.00 | 12,025.00 | 11,365.00 | 10,815.00 | 10,225.00 | 9,965.00 | 9,625.00 |
| 12 ஆம் ஆண்டு | 12,850.00 | 12,200.00 | 11,515.00 | 10,940.00 | 10,325.00 | 10,065.00 | 9,725.00 |
| 13 ஆம் ஆண்டு | 13,050.00 | 12,375.00 | 11,665.00 | 11,065.00 | 10,425.00 | 10,165.00 | 9,825.00 |
| 14 ஆம் ஆண்டு | 13,250.00 | 12,550.00 | 11,815.00 | 11,190.00 | 10,525.00 | 10,265.00 | 9,925.00 |
| 15 ஆம் ஆண்டு | 13,450.00 | 12,725.00 | 11,965.00 | 11,315.00 | 10,625.00 | 10,365.00 | 10,025.00" |

11- 983/3

## சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

அறிவித்தல்

### ஆதுலர் மனைத் தொழில்

(136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 28 ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க ஆதுலர் மனைத் தொழிலுக்கான சம்பளச் சபையானது மேற்கூறப்பட்ட கட்டளைச் சட்டத்தின் 30 ஆம் பிரிவினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் பயனைக் கொண்டு இதற்கான அட்டவணையிற் குறித்துரைக்கப்பட்டுள்ள சபையின் அத்தகைய முடிபுகளை அவ்வட்டவணையிற் தரப்பட்டுள்ள முறையில் வேறுபடுத்துவதற்கு உத்தேசிக்கின்றதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்கூறிய உத்தேசத்திற்கான ஆட்சேபனைகள் 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 06 ஆந் திகதி நண்பகல் 12.00 மணி வரை சபையின் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

அத்தகைய ஆட்சேபனை ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதலும் அத்தகைய ஆட்சேபனைகள் எந்த ஏதுக்களின் மீது எடுக்கப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றைக் கொண்டிருத்தலும் வேண்டும்.

வி. பி. பீ. கே. வீரசிங்க,
தலைவர்,
ஆதுலர் மனைத் தொழிலுக்கான
சம்பளச் சபை.

தொழில் திணைக்களம்,
கொழும்பு 5,
2012,ஒற்றோபர் 12.

#### அட்டவணை

ஆதுலர் மனைத் தொழிலுக்கான சம்பளச் சபையினால் ஆக்கப்பட்டவையும், 1974 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 22 ஆந் திகதிய 104 ஆம் இலக்க வர்த்தமானியில் வெளியிடப்பட்ட அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டதும் காலத்திற்குக்காலம் வேறுபடுத்தப்பட்டவையும், 2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 30 ஆந் திகதிய 1,660/35 ஆம் இலக்க வர்த்தமானி அறிவிப்பின் மூலம் கடைசியாக வேறுபடுத்தப்பட்டவையுமான முடிபுகள், அவ்வட்டவணையின் II ஆம் பாகத்திற்கு பதிலாகப் பின்வரும் புதிய பந்தியை இடுவதன் மூலம் மேலும் வேறுபடுத்தப்படுதல் வேண்டும் :-

"பாகம் II

**வேலையாளரின் வகுப்பு**

**தரம் I**

தலைமைத் தாதி, அப்போதிக்கரிமார்

**தரம் II**

வாகடகர், தாதிச் சகோதரி, ஆய்வுகூட தொழல்நுட்பவலர், கதிரியக்கத் தொழில்நுட்பவியலாளர்,

**தரம் III**

(அ) தாதிமார், மருத்துவிச்சிமார், களஞ்சியக்காப்பாளர்
(ஆ) பயிற்சி பெறும் தாதிமார் : பயிற்சியின் 1 ஆம் ஆண்டு
பயிற்சியின் 2 ஆம் ஆண்டு
பயிற்சியின் 3 ஆம் ஆண்டு

**தரம் IV**

எழுதுவினைஞர்கள், தட்டெழுத்தாளர்கள், வரவேற்பாளர்கள், தொலை பன்னி இயக்குநர்கள், காசாளர்கள்.

**தரம் V**

கவனிப்பாளர்கள், மருந்தகர்கள், அறுவை மருத்துவ மருந்துகட்டுநர்கள், உணவு மேலாளர், மேற்பார்வையாளர்கள், வாட்டு எழுதுவினைஞர்கள், உணவுப் பட்டியல் எழுதுவினைஞர்கள்

**தரம் VI**

ஓடலிமார், பியோன்மார், சமையற்காரர்கள், காவலாளர்கள், மலசலகூடத் தொழிலாளர்கள்.

**தரம்** VII

துணியறைக் கவனிப்பாளர்கள், தொழிலாளர்கள், தோட்டத் தொழிலாளர்கள், பெருக்குநர்கள், சாப்பாட்டறைப் பையன்கள்.

'ஆண்டு' என்பது, எவரேனும் பயிற்சி பெறும் தாதி தொடர்பாக, பன்னிரண்டு மாதங்கள் தொழிலில் ஈடுபடுத்தல் எனக் கொண்ட ஊழியமென கருதப்படல் வேண்டும்.

*மாதமொன்றுக்கான ஆகக் குறைந்த சம்பள வீதம்*

| ஊழிய ஆண்டு | தரம் I<br>ரூ. ச. | தரம் II<br>ரூ. ச. | தரம் III (அ)<br>ரூ. ச. | தரம் III (ஆ)<br>ரூ. ச. | தரம் IV<br>ரூ. ச. | தரம் V<br>ரூ. ச. | தரம் VI<br>ரூ. ச. | தரம் VII<br>ரூ. ச. |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 ஆம் ஆண்டு | 11,175.00 | 10,935.00 | 10,530.00 | 6,620.00 | 10,205.00 | 9,880.00 | 9,560.00 | 9,315.00 |
| 2 ஆம் ஆண்டு | 11,425.00 | 11,160.00 | 10,730.00 | 6,770.00 | 10,380.00 | 10,030.00 | 9,685.00 | 9,415.00 |
| 3 ஆம் ஆண்டு | 11,675.00 | 11,385.00 | 10,930.00 | 6,920.00 | 10,555.00 | 10,180.00 | 9,810.00 | 9,515.00 |
| 4 ஆம் ஆண்டு | 11,925.00 | 11,610.00 | 11,130.00 | | 10,730.00 | 10,330.00 | 9,935.00 | 9,615.00 |
| 5 ஆம் ஆண்டு | 12,175.00 | 11,835.00 | 11,330.00 | | 10,905.00 | 10,480.00 | 10,060.00 | 9,715.00 |
| 6 ஆம் ஆண்டு | 12,425.00 | 12,060.00 | 11,530.00 | | 11,080.00 | 10,630.00 | 10,185.00 | 9,815.00 |
| 7 ஆம் ஆண்டு | 12,675.00 | 12,285.00 | 11,730.00 | | 11,255.00 | 10,780.00 | 10,310.00 | 9,915.00 |
| 8 ஆம் ஆண்டு | 12,925.00 | 12,510.00 | 11,930.00 | | 11,430.00 | 10,930.00 | 10,435.00 | 10,015.00 |
| 9 ஆம் ஆண்டு | 13,175.00 | 12,735.00 | 12,130.00 | | 11,605.00 | 11,080.00 | 10,560.00 | 10,115.00 |
| 10 ஆம் ஆண்டு | 13,425.00 | 12,960.00 | 12,330.00 | | 11,780.00 | 11,230.00 | 10,685.00 | 10,215.00" |

11 - 983/4

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.